செ.வெ.எண்: 06 நாள்: 02.08.2021

**தமிழக அரசின் உத்தரவின்படிஇ கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் கொரோனா சிகிச்சை பணியில் ஈடுபடத்திட முற்றிலும் தற்காலிகமாக மாததொகுப்பூதிய அடிப்படையில்** விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தகவல்

தமிழக அரசின் உத்தரவின்படிஇ கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் கொரோனா சிகிச்சை பணியில் ஈடுபடத்திட முற்றிலும் தற்காலிகமாக பதினான்காயிரம் மாததொகுப்பூதிய அடிப்படையில் 75 செவிலியர்களும், பனிரெண்டாயிரம் மாததொகுப்பூதிய அடிப்படையில் தலா 10 மருந்தாளுநர்கள், 10 அனஸ்தீசிய டெக்னீசியன், 10 இ.சி.ஜி டெக்னீசியன், 10 டயாலிசிஸ் டெக்னீசியன்இ 10 ரேடியோகிராபர் மற்றும் 5 சி.டி ஸ்கேன் டெக்னீசியன் உள்ளிட்ட பணியிடங்கள் தற்காலிகமாக ஆறுமாத காலத்திற்கு மட்டுமே பணிபுரிந்திட அனுமதிக்கும் வகையில் அரசு / அரசு அங்கிகாரம் பெற்ற கல்வி நிறுவனத்தில் தேர்ச்சி பெற்றவர்களைக் கொண்டு நிரப்பப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த பணியிடங்களில் முற்றிலும் தற்காலிகமாக ஆறு மாத காலத்திற்கு மட்டுமே நியமிக்கப்படுவதால். எதிர் காலத்தில் இப்பணியை வரண்முறை செய்திடவோ அரசுப் பணியில் முன்னுரிமை மற்றும் நிரந்தர வாய்ப்பு கோரிடவோ எவ்வித உரிமையும் கிடையாது என்பது தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இப்பணியிடங்களுக்கு தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதிச் சான்றிதழ்கள் நகல்கள் அனுபவ சான்றிதழ் நகல் ஆளறிசான்றிதழ் நகல் மற்றும் பாஸ்போட் அளவு புகைப்படத்துடன் வரும் 04.08.2021 க்குள் கரூர் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வருக்கு விண்ணப்பிக்கலாம் என்பது இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. விண்ணப்பித்தவர்கள் மற்றும் பணிவேண்டுவோர் 05.08.2021 அன்று காலை 10 மணிக்கு கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெறும் நேர்காணலில் அசல் சான்றுகளுடன் கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர்,இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**